ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2146/31 - 2019 ඔක්තෝබර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.24

*2146/31 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராகவிருப்பதனால் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதிய 1974/7 ஆம் இலக்க, 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிய 2049/59 ஆம் இலக்க மற்றும் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதிய 2062/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப் பின்னரான கட்டளைகளினால் திருத்தப்பட்டவாறாக 2012, திசெம்பர் 19 ஆந் திகதிய 1789/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.*

*2016, யூலை மாதம் 04 ஆந் திகதிய 1974/7 ஆம் இலக்க, 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிய 2049/59 ஆம் இலக்க மற்றும் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதிய 2062/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளைகளினால் திருத்தப்பட்டவாறாக 2012 ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆந் திகதிய 1789/ 22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் வாசகம் (4), கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தை நீடிப்பதற்கெனப் பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

*"(4) மேல் மாகாணத்தில் கொழும்பு 3, காலி வீதி, 116 ஆம் இலக்கத்தில் 90 சேவையளிக்கப்பட்ட இருப்பிடக்கூறுகளுடன் 475 அறைகளைக் கொண்ட நகர ஹோட்டலொன்றை நிர்மாணித்து தொழிற்படுத்துவதற்கான மேற்கூறப்பட்ட கருத்திட்டம்", 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதியன்று, இலங்கை முதலீட்டுச் சபையுடன் கையொப்பமிடப்பட்டு 2022 ஆம்*

ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று முடிவடைகின்ற கருத்திட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து நூற்றிருபத்தைந்து (125) மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும் ; அத்துடன் 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிய 1771/ 18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட நூற்றைம்பத்தெட்டு மில்லியின் எட்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட (ஐ. அ. டொ. 158,890,000) குறைந்தபட்ச முதலீடு, நிர்மாணத்தைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்பட்ட மேலதிக முதலீட்டைப் பிரதிபலிப்பதற்கு இருநூற்றைம்பது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக (ஐ. அ. டொ. 250,000,000) அதிகரிக்கப்படுதல் வேண்டும்.”

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
2019, ஒற்றோபர் 22.

11-782

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.